செ.வெ.எண்: 10 நாள்: 10.11.2018

## அரியலூர் மாவட்டத்தில் பள்ளி ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் கடந்த மார்ச் 2018 ஆம் ஆண்டு நடை பெற்ற 10-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்ற அரியலூர், உடையார்பாளையம் மற்றும் செந்துறை கல்வி மாவட்டத்தை சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள 40 தலைமையாசிரியர்களுக்கும், 600 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் இன்று (10.11.2018) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்தாவது, கல்வியும், சுகாதாரமும் நாட்டின் இருகண்களாக போற்றப்படுகிறது. கல்வியை போதிக்கும் ஆசிரியர் பணி மிகவும் மகத்துவம் வாய்ந்த அறப்பணியாகும். அதிலும் அரசு பொதுத்தேர்வுகளில் ஒரு பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளையும் தேர்ச்சி பெறச்செய்து அதிக மதிப்பெண் பெறச்செய்வது சிறப்புக்குறிய பணியாகும். இந்த தேர்ச்சி விழுக்காடு மற்றும் மதிப்பெண் விழுக்காடு முழுமையாக மாணவ – மாணவிகள் பெற தமிழக அரசு பல்வேறு திட்டங்கள் வகுத்து விலையில்லா பாடப்புத்தகம் குறிப்பிடுகள் சீருடைகள் மடிக்கணினி, மிதி வண்டி, என அனைத்தும் விலையில்லாமல் வழங்கி வருகிறது இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி மாணவ-மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்கச் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர்.அ.புகழேந்தி, மாவட்ட கல்வி அலுவலர்கள் செல்வராஜ் (அரியலூர்), மணிவண்ணன் (உடையார்பளையம்), வெற்றிசெல்வி (செந்துறை), பள்ளி துணை ஆய்வாளர் பழனிசாமி மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**